28th March 1964]

மென்ற முயற்சி 1950-ம் ஆண்டிலிருந்து இருந்து வருவதால், அந்தக் காரணத்தை உத்தேசித்தும், நீண்ட காலம் கடந்து விட்டதை உத்தேசித்தும், கட்டுகின்றபோது இதற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு கட்டப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, 'தேசிய நெருக்கடி காரணமாக வேறு எந்த ஊருக்கும் கொடுக்கவில்லை' என்று சொன்னார்கள். ஆனால், போடியில் 6 லட்ச ரூபாய்ச் செலவில் ஒரு கட்டடம் கட்டப்படுகிறது. இடம் வாங்க 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் நகரம் அது. அப்படிப்பட்ட நகரத்தில் ஆஸ்பத்திரி கட்டும் விஷயத்தில் தேசிய நெருக்கடி என்கிற காரணத்தைக் காட்டித் தள்ளிபோடாமல், உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டிய ஏற்பாடு செய்ய அமைச்சர் முயற்சிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பொறுத்த மட்டில் அதற்காக 5-20 ஏக்கர் நிலம் அக்வையர் செய்தாய்விட்டது. அதைக் கட்டவேண்டும் என்ற உத்தேசம்தான் அரசாங்கத்திற்கு இருக்கிறது. தேசிய நெருக்கடி காரணமாகக் கட்டப்படாமல் தள்ளிப்போடப்பட்ட கட்டடங்களை மீண்டும் எடுத்துக்கொள்ளும்போது, பரமக்குடி ஆஸ்பத்திரிக் கட்டடமும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: 1954-ம் ஆண்டில் ஸௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் ஸப்ளை கார்ப்பரேஷனை எடுக்கும்போது, அந்தக் கட்டடத்தில் பரமக்குடி ஆஸ்பத்திரி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்பற்றி மீண்டும் பரிசிலனை செய்து, அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பரமக்குடி ஆஸ்பத்திரிக்குப் புதுக் கட்டடமே கட்டவேண்டுமென்ற ஏற்பாடு இருக்கிறது. பழைய கட்டடத்திற்குத் திருப்பிப் போக வேண்டும் என்ற எண்ணத்தையே கனம் அங்கத்தினர் கைவிட்டு விடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நல்ல காலம் வரும்வரை வியாதி காத்துக்கொண்டிருக்குமா? நல்ல காலம் எப்பொழுது வரும் என்று அமைச்சர் அவர்கள் எண்ணுகிறார்கள்?

கனம் சபாநாயகர்: நல்ல காலம் வரும்போது வியாதி போய் விடும்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: வியாதி காத்துக் கொண்டிருக்காது, நல்ல காலத்திற்கும் கெட்ட காலத்திற்கும், ஆனால், ஆஸ்பத்திரி காத்துக் கொண்டிருக்கலாம் என்று தான் நான் கூறினேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் தொழில்.

*421. **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து:** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

1963-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்திக்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன ?

கனம் திரு. கோ. பூவராகன் : சபையில் ஓர் அறிக்கை* வைக்கப் பட்டுள்ளது.

திரு. அ. ப. அழகமுத்து : "மீன்பிடித் துறைமுகங்கள்" என்னும் தலைப்பில், "குளச்சல் பகுதியில் இந்தியக் கப்பற் படையினர் தங்கள் சர்வே வேலையை முடித்துவிட்டனர். இந்த சர்வேயின் அடிப்படையில், பொதுப் பணித் துறையினர் ரூ. 126 லட்சம் செலவில் குளச்சலில் மீன்பிடித் துறைமுகத்திற்கான பூர்வாங்க வரைப்படங்களையும், மதிப்பீடுகளையும் தயாரித் துள்ளனர்" என்று பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை முடிந்து இப்பொழுது எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். இதற்கு அன்னியச் செலாவணி வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கத்தைக் கோரி யிருக்கிறோம். அது கிடைத்தவுடன் ஆரம்பிக்கப்படும்.

அழகியபாண்டியபுரம் அரிசன காலனி.

*422. **கேள்வி—திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :—

(அ) நெல்லை தாலூகா அழகியபாண்டியபுரம் அரிசனங் களின் காலனிக்கு நெல்லை—சங்கரன்கோவில் ரோடிலிருந்து ஓர் இணைப்பு பாதையும் ஒரு கல்வர்ட்டும் அமைப்பதற்கு அரிசன நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்படி வேலைகள் எப்போது பூர்த்தி யாகும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes. The Collector of Tirunelveli first sanctioned the execution of the work from the Harijan Welfare funds. Subsequently on finding that the expenditure has to be met from Village Works Grant, he transferred the work to the Commissioner, Panchayat Union, Manoor for execution from the Village Works Grant.

(*b*) The work is expected to be completed before the end of this financial year.

கனம் திரு. பூ. கக்கன் : ஆம். திருநெல்வேலிக் கலெக்டர் முதலில் இந்த வேலைகளை ஹரிஜன நல நிதியிலிருந்து நிறை வேற்ற அனுமதி வழங்கினார். ஆனால் பின்னர் அந்த வேலைக்குரிய செலவு, கிராமப்பணிகள் மானியத்திலிருந்து செய்யப்பட வேண்டுமென்று தெரிந்த பிறகு அதை அவ்வாறே நிறை வேற்ற மானூர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு மாற்றி விட்டார்.

---

* 571–576 ம் பக்கங்களில் முதலாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.